RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# தூசி - புனைக்கதை வழி ராஜம் கிருஷ்ணனின் எழுத்தாளுமை

வை. நம்பித்தாய் [அ] *

[அ] தமிழ்த்துறை, இ.மா.கோ.யாதவர் மகளிர் கல்லூரி, மதுரை - 14, தமிழ்நாடு, இந்தியா.

# 'Thoosi' - Rajam Krishnan's Literary Prowess through Fiction

**V. Nambithay** [a, *]

[a] Department of Tamil, E.M.K. Yadhavar women's college, Madurai-14, Tamil Nadu, India

*Corresponding Author:
v.nambithai1970@gmail.com

Received: 09-12-2025
Revised: 17-02-2026
Accepted: 05-03-2026
Published: 17-03-2026

Check for updates

**ABSTRACT**

Rajam Krishnan was born in 1925 in Musiri, in the Trichy district, as the daughter of Yajna Narayanan and Meenakshi. She did not have the opportunity for formal schooling or a college education; she was married off at the age of fifteen. She taught herself English, Tamil, and Hindi. Her husband was the engineer Muthu Krishnan. Her first short story was published in 1946. She was an author who immersed herself in the lives of the people she wished to document—living among them, observing their daily existence, and experiencing it firsthand before writing about it. Rajam Krishnan championed women's liberation by embracing the constructive aspects of tradition while simultaneously integrating the revolutionary elements of modernity. She stood as an exemplar for womanhood itself. Having forged a unique literary style and gained a profound understanding of life, she enriched the landscape of Tamil literature. She lived within a joint family system and, owing to her husband's professional assignments, moved to various towns, where she adapted gracefully to the local environments. The true stature of Rajam Krishnan as a personality lies in the fact that—while navigating the cultural complexities inherent in family life—she emerged as a trailblazing creator who never compromised her own distinct identity. She was deeply committed to Gandhian ideals and led a life of great simplicity. She extended whatever assistance she could to many people. Eschewing personal accumulation, she dedicated herself entirely to thoughts and concerns regarding society. In her final days, as the infirmities of old age set in, she spent some time living in a retirement home. When her health began to fail, she made a resolute decision to donate her body to Ramachandra Hospital—a wish she subsequently saw through to fruition. She was the recipient of numerous awards. This remarkable figure passed away on October 21, 2014, following a period of ill health. The objective of this research paper is to elucidate Rajam Krishnan's literary prowess through an analysis of her short story *Thoosi* (Dust) and her various novels.

**Keywords:** Thoosi, Tradition, Family System, Rajam Krishnan.

## முன்னுரை

ராஜம் கிருஷ்ணனைப் பற்றி 'தேரோடும் வீதி' என்ற நீல பத்மநாபன் எழுதிய தமிழ் எழுத்தாளர்கள் பற்றிய நாவலில், தமிழ் எழுத்தாளர்கள் நிறைய பேர் ரயிலில் பயணம் செய்கின்றனர். ஒரு பெட்டியில் மூன்று பெண் எழுத்தாளர்கள் மேல் பெர்த்தில் உள்ளனர். கீழே இரு ஆண் எழுத்தாளர்கள் உரையாடிக் கொண்டிருக்கின்றனர். அதில் ஒருவர் கூறுகிறார் "மெதுவாக பேசுங்கள் மேலே உள்ள அந்தப் பெண் படைப்பாளி இதைக் கேட்டுவிட்டால் விவரங்கள் சேகரிக்க ஆரம்பித்து விடுவார்". இது ராஜம்கிருஷ்ணனை குறிப்பதாக அமைந்துள்ளது. அந்த அளவிற்குக் கள ஆய்வு செய்வதில் ஈடுபாடுக் காட்டினார். இதைப் பற்றி அவரே கூறியும் இருக்கிறார்.

## தூசி யார்

பணக்கார வர்க்கத்தில் ஏழைத் தோற்று, பின் ஒரு சூழலில் ஏழைக் குழந்தையும், பணக்கார மாமியும் உரையாடுவதன் வாயிலாக ஒரு அன்பின் வலிமையை அழகாக எடுத்துக் கூறும் ஆளுமையை என்னவென்று சொல்வது. பணக்கார வீட்டு சந்துக்குள் குடியிருக்கும் பேபி, தம் வீட்டில் இருக்கும் பொம்மை போல் இருக்கும் மாமியைப் பார்க்கிறாள். அவளிடம் உரையாடும் வகையிலே ஆசிரியர் கதையை நகர்த்தி செல்கிறார். கதையின் தலைப்பு 'தூசி' என்பதால் குழந்தை கேட்கும் கேள்விகளுக்கு கண்ணில் தூசி விழுவதாக நகர்ந்து செல்லும் மாமி தூசியா? அல்லது குழந்தைப் பேச்சிலிருந்து பணக்காரர்கள் தூசியாக இருப்பது தூசியா? தலைப்பை எப்படி வேண்டுமானாலும் நாம் எடுத்துக் கொள்ளலாம். கதையின் போக்கை ஆசிரியர் ரொம்ப அழகாக சித்தரித்திருப்பதில் இருந்து அவரின் எழுத்தாளுமையை ரசிக்கலாம்.

## பேபி மாமி உரையாடல்

சிறுகதை என்பதே ஏதேனும் ஒரு நிகழ்வை அல்லது ஒரு செய்தியை ஒரு சிறுகதை மாந்தர்களைக் கொண்டு அதிக பீடிகைகள் இல்லாமல் வெளிப்படையாக சொல்வதாகும். அத்தகைய பண்பு வாய்ந்த சிறுகதையில் ஒன்றுதான் தூசி. இக்கதையில் குழப்பமான ஒரு செய்தியைப் பேபி மாமி உரையாடல் வழியாக வெளிப்படையாக உணர்த்துகிறாள் ஆசிரியர். இந்தக் கதை "என்னம்மா குழந்தை ஏன் அப்படிப் பார்க்கிறே?"[1] (தூசி சிறுகதை) என்று மாமியின் குரலில் தொடங்குகிறது. ஏழை வீட்டுப் பெண்ணான ஆறு வயதுடைய பேபி செம்பட்டை தலையுடனும், அழுக்கு ஆடையுடனும் கருவிழிகள் குறுகுறுக்க, வியப்போடு மாமி கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லாமலே பார்த்துக் கொண்டிருந்தாள். மாமி உன்னுடன் விளையாட யாரும் இருக்கிறார்களா என்று பார்க்கிறாயா? ஒருவரும் இல்லையே என்கிறாள். வியந்து பார்த்துக் கொண்டிருந்த பேபி உடனே "நீங்க மட்டும் தான் இருக்கிறீர்களா மாமி?" "எங்க வீட்டு மாமா ஆபீஸ் போய் விட்டார். சாயங்காலம் வருவார்" வேறு ஒருத்தரும் இல்லையா மாமி? "ஊஹூம் ஒரு அக்கா இருக்கிறாள். அவள் இன்னொரு வீட்டுக்குப் போய் விட்டாள். இங்கு ஆசிரியர் ராஜம் கிருஷ்ணன் தாய்மையின் இயலாமையை இலாகவமாக எடுத்துரைக்கிறார். (திருமணம் முடிந்து இன்னொரு வீட்டுக்குப் போய்விட்டதாக கூறுவதாக அமைகிறது) உள்ளே வாம்மா, இங்கே வெயில்..." தயங்கி தயங்கிப் படியேறி வாசல் வரந்தா பெஞ்சில் உட்கார்ந்தாள் பேபி. உன் பெயர் என்னம்மா? பேபி மாமி! அப்பா மட்டும் சுந்தரானு கூப்பிடுவார். இதோ சந்து தெரியறது பாருங்கோ, அதற்குள் தான் எங்க வீடு!" அவள் காட்டிய சந்துக்கு நேராக இருந்த குழாயடி காய்ந்து கிடந்தது. குடங்கள் மட்டும் ஒன்றிரண்டு வந்து காத்துக் கிடந்தன. மாமி... என்னம்மா? உங்கள் பெயர் சுந்தராம்பா தானே என்று கேட்கிறாள். இந்த கேள்வி மாமிக்கு எதிர்பாரததாக இருந்தாலும் சமாளித்துக் கொண்டு அப்படி யாரு சொன்னது. எங்க வீட்டிலே உங்களை மாதிரியே அச்சா ஒரு பொம்மை பண்ணி வெச்சிருக்கார். எங்க அப்பா நான் மைதிலி எல்லாம் பிறக்குறதுக்கு முன்னேயே... அந்த பொம்மை பேரு கூட சுந்தராம்பானு சொல்லுவார்...." அதுமட்டுமல்ல மாமி எங்க அப்பா நிஜ மனுசன் மாதிரியே பொம்மை பண்ணுவார். பேபி உனக்கு அக்கா அண்ணா எல்லாம் உண்டா? ஆமாம் மாமி. மாமி ராத்திரி மழை வந்தா எங்க வீட்டில் மூன்று பேர்தான் உள்ளே படுத்துக்க முடியும். அப்பாவும் அண்ணனும் டாக்டர் மாமா வீட்ல போய் படுத்தப்பா. பேபி யோசனை செய்துவிட்டு என்னைக்காவது இனிமேல் மழை பெய்தால் ராஜூ, அப்பா இங்கே படுத்துக்கொள்ள இடம் தருவீங்களா என்று கேட்டாள். இங்கு மாமியின் செயல்பாட்டை ராஜம் கிருஷ்ணன், "இரம்மா குழந்தை, கண்ணிலே தூசி விழுந்து விட்டாற்போல் இருக்கிறது. அலம்பிக்கொண்டு வருகிறேன்"[2](தூசி சிறுகதை) இங்கு பெண் சகஜமாக குழந்தையிடம் பேசினாலும் வீட்டுக்குள் அனுமதிக்க உரிமை இல்லாதவளாக இருக்கிறாள். மாலை, இடி இடித்து ஆர்ப்பாட்டத்துடன் மழை கொட்டியது. மாமிக்கு 'எங்க ராஜூவுக்கும் அப்பாவுக்கும் கொஞ்சம் இடம் தருவேளா?' என்று கதவை யாரோ தட்டினாற்போல் பிரமையாக இருந்தது. மறுநாள் அவர் ஆபிசுக்குச் சென்ற பின், மாமி சாப்பிட்டு விட்டுக் கைக்கழுவ வருகையிலே, வாசற்படியில் நிழலாடியது. சாப்பிடவாம்மா பேபி. இல்லை மாமி இப்பத்தான் சாப்பிட்டேன். மாமி நான் அப்பாவிடம் சொன்னேன் மழைக்கு படுக்க இடமும் கேட்டேன் என்று சொன்னேன் அப்படியெல்லாம் கேட்கக்கூடாது என்றார். அப்பா ரொம்ப நல்லவரு என்னை 'சுந்தராக் கண்ணு' என்றுதான் கூப்பிடுவார். அந்த பொம்மையில இருக்காளே அவ பேரு தான் எனக்கு. அவ ரொம்ப நல்லவா. அப்பா ஜெயிலில் இருந்து தப்பி வந்தப்ப யாருக்கும் தெரியாமல் சாப்பாடு கொடுத்தாளாம். அப்பாவுடைய கிளாஸ்மேட் தான். ஜெயிலுன்னு சொன்னவுடன் திருடன் என்று நினைச்சீங்களா? வெள்ளைக்காரனை எதிர்த்து ஜெயிலுக்குப் போனவரு. ஆனால் அவ அப்பா வந்து அவளை அடிச்சு கூட்டிட்டு போயிட்டாராம். பாவம் அப்புறம் செத்துப் போயிட்டாள் என்று அப்பா சொன்னாரு மாமி நேத்திக்கு. "தூசி விழுந்துவிட்டது என்று சொல்லாமலே அவள் எழுந்து சென்றாள்." [3](தூசி சிறுகதை) பேபி அவளைக் குறுகுறு என்று நோக்கினாள். "ஒண்ணுமில்லே பேபி, கண் வலிக்கிறது. உறுத்துகிறது. தண்ணீர் விட்டுத் துடைத்துக் கொண்டேன்" என்று அவள் திரும்பி வந்தாள். பேபி மாமியிடம் தன் வீட்டுக்கு வர வேண்டும் என்றும், தன் காது கேளாத அம்மாவின் நிலையையும், வறுமையையும் அவள் செய்த சாப்பாட்டைப் பற்றியும்

எடுத்துரைத்தாள். பேபியின் அம்மா வீட்டுக்கு வந்த மாமியிடம் பேபி உங்க வீட்டுக்கு வந்து சாப்பிட்டு குண்டாகி விட்டாள் என்றாள். கள்ளகபடமற்ற கணவனுக்கு ஏற்ற மனைவி என்று நினைத்தாள் மாமி. மாமி! இதோ பாருங்க உங்களைப் போலவே இது அச்சா இல்ல. பேபி அந்த சிறிய சிற்பத்தை அவளுக்குக் காட்டுகையில், அந்தத் தாய் முன்பு அந்தத் தந்தை செய்த கைவண்ணங்கள் குறித்து பேசினாள். ஆனால் மாமியின் மனநிலையோ, "கலை வாழ்வாகிய சத்திய வேட்கைக்கும், அன்றாட உலகில் பேர் சொல்லும் பண வாழ்வாகிய பொய் வேட்கைக்கும் எப்போதும் உண்டாகும் மோதல்கள்…."[4](தூசி சிறுகதை) என்று எண்ணி தன் கணவர் வருவது தெரியாமல் கண்ணாடி முன் நின்றிருந்தாள். ஆமாம் அந்த சுந்தராம்பாள் இல்லை இவள்.

அங்கு உயிர்ச் சின்னம் போல் வாழ்பவளின் மூலமான சுந்தராம்பாள், அன்றே இல்லாதவளாகி-விட்டாள்…"[5](தூசி சிறுகதை) கணவர் என்ன சுந்தரா, கண்கள் கலங்கி இருக்கிறதே? பெண்ணை நினைத்துக் கொண்டாயா? ஒன்றுமில்லை 'தூசி' என்று கதை முடிகிறது. ஒடுக்கு முறைகளில் இருந்து வெளிப்பட்டு, சமுதாய சமநிலை என்ற உரிமை பெறுவதுதான் பெண் அடைய வேண்டிய இலக்கு என்பது இக்கதையின் வழி அவர் கூறலாகும் கருத்தாகும். இக்கருத்து மக்களிடையே செல்லும் போது ராஜம் கிருஷ்ணனின் எழுத்தாளுமை நமக்குப் புலப்படும்.

## ராஜம் கிருஷ்ணனின் பிற படைப்புகளில் பெண்ணிய எழுத்தாளுமை

ராஜம் கிருஷ்ணனின் முதல் நாவல் 'சுதந்திர ஜோதி' வரதட்சணை ஒழிப்பின் அடையாளமாகிறது. சிக்கலைக் காட்டுவதோடு நின்று விடாமல் பாதிக்கப்பட்டவர்கள் அதிலிருந்து மீட்சி பெற வேண்டுமென்றால் உரக்கக் குரல் கொடுப்பது தான் ஒரே வழி என்ற பார்வையில் சந்திராவின் பாத்திரத்தைக் காட்டி சிக்கல் தீர பாதை காட்டுகிறார். சமூகத்தை திருப்திப்படுத்தும் வகையில் அது இழுத்த இழுப்பிற்கெல்லாம் ஏற்றபடி வாழ்கிற பெண்ணின் நிலையைச் சித்தரிக்கும் நிழற்கோலம் நாவல் வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுக்கும் உரிமை பெண்ணுக்கு இருக்க வேண்டியதன் கட்டாயத்தைத் தெளிவுப்படுத்துகிறது. 'வேருக்கு நீர்' நாவலின் மூலம் கருவை அழிக்க கணவன் வற்புறுத்தும் சூழலில் உள்ள பெண்ணை காட்டுவதுடன் நின்று விடாமல் எந்தச் சூழலிலும் அவனுடைய வற்புறுத்தலுக்கு இணங்காத உறுதியையுடைய பெண் உள்ளம் வெளிப்படுத்தப்படுகிறது. 'அழுக்கு' நாவலின் மூலம் அலுவலகத்திலும், சமுதாயத்திலும் கணக்கற்ற துன்பங்களையும், தொல்லைகளையும் சந்திக்கும் ஒரு பெண் அதிகாரி 'சத்தியம்' ஒன்றே நிலை நாட்டப்பட வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் செயல்படுவதான நிலை காட்டப்படுகிறது. 'வீடு' நாவல் மூலம் குடும்பம் என்ற அமைப்பில் ஆணின் செல்வாக்கு முழுமையானதாகவும், பூஜ்ஜியம் என்ற அளவிலேயே பெண்நிலை உள்ளதாகவும் சித்தரிக்கப்பட்டுள்ளது. வீட்டின் முன்னேற்றத்திற்காக மட்டுமே பாடுபடும் குடும்பத் தலைவி தன்னை கணவன், குழந்தைகள் என யாருமே உணராத போது 'தன்னை' உணர்ந்து தன் உதவி தேவைப்படும் மனிதர்களைச் சார்ந்து வாழக் 'கட்டிலிருந்து' வெளியேறுகிறாள். சிக்கல்களை எதிர்க்கத் துணிவில்லாமல், மனம் முடங்கிப் போக நலிந்து போகும் பெண் சமூக எண்ணிக்கையை குறைத்து சிதைந்து போன உள்ளங்களை மாற்றும் ஒரு படைப்பாக அமைகிறது. இத்துணை கட்டமைப்பிலிருந்தும் ராஜம் கிருஷ்ணனின் எழுத்தாளுமை பொருளாதார விடுதலை, தற்சார்பு, சமூக நிகழ்வுகளில் பங்கு என்று பல நிலைகளை முழுமையாக வெளிப்படுத்துபவையாக அமைகின்றன. வன தேவியின் மைந்தர்கள் என்ற நாவலின் மூலம் "குழந்தைகளே, அவர்கள் சொல்லும் வேள்வி கொல்லும் செயல். சத்தியமுனிவரும் நந்த சாமியும் மேற்கொண்டு நம்மையும் ஈடுபடுத்தும் வாழ்க்கையே வேள்விதான். வேள்வி என்பது ஓமகுண்டத்தில் போடும் சமித்துகளும் உயிர்ப்பிண்டகளும் அல்ல. நல்ல உணவை பக்குவப்படுத்துவதும் வேள்வித்தீதான்"[6] (வனதேவியின் மைந்தர்கள் ப. 152) என்பதான புதுமைச் சிந்தனைகளை விதைத்துத் தனது குழந்தைகள் இருவரையும் சமத்துவச் சிந்தனையாளர்களாக வளர்க்கிறாள் பூமகள். தன் தந்தை வந்து வாரிசு உரிமை கொண்டாடிய போது பிள்ளைகள் இருவரும் செல்ல மறுக்கின்றனர். 'மாமன்னரே நாங்கள் வனதேவியின் மைந்தர்கள். வனமே எங்கள் தாயகம் நாங்கள் ஒருபோதும் தங்களுடன் வந்து வாழச் சம்மதிக்க மாட்டோம். இங்கு நாங்கள் சுதந்திரமானவர்கள். உழைத்து விளைவைப் பகிர்ந்துண்டு எல்லோரும் வாழ நாங்களும் இன்பமுடன் வாழ்வோம் என்று சமதருமச் சிந்தனையுடன் தந்தைக்குப் பதில் தரும் பிள்ளைகள் எங்கள் அன்னை இசைந்தாலும் நாங்கள் சம்மதிக்க மாட்டோம் என்று பதில் தருகின்றனர்"[7].(மனதேவியின் மைந்தர்கள் ப. 209) எங்கே வன்முறையும் ஆணாதிக்கமும் கொண்ட மன்னராட்சிக்கு எதிரான பொது மக்களின் விமர்சனங்கள் பெண்ணியக் குரலாக வென்றெடுக்கிறது. இவ்வாறு ராஜம் கிருஷ்ணனின் படைப்புகள் பெண்ணிற்கு வழிகாட்டியாக பெண்கள் இச்சமுதாயத்தில் வளர்ச்சி பாதையை அடையுமாறு ராஜம் கிருஷ்ணனின் எழுத்தாளுமை சிறந்து நிற்கிறது.

## முடிவுரை

மனித வாழ்வில் குடும்பங்களில் தினந்தோறும் நடக்கும் சிறிய செயலும் அவரது கூர்மையான பார்வையில் புனை கதையாக மிளிர்கின்றது. தினந்தோறும் காணுகின்ற பிரச்சனைகளை சமாளிக்க வேண்டிய சாதாரண மனிதனின் நிகழ்ச்சிகள் ராஜம் கிருஷ்ணனின் எளிமையான அன்புப் பார்வையில் கதையாக பரிணமிக்கின்றன. ராஜம் கிருஷ்ணனின் 'தூசி' கதையில் உளப்பாங்கு (Psychological) பற்றியும் அதோடு இயந்த நிலையில் உயிர்களினிடையே அன்பு பரிணாமத்தையும் இக்கதை எடுத்துரைக்கின்றது. வாசகர்களின் மனத்தில் கதையின் கருத்தினை பதிய வைக்கும் நோக்கமானது ராஜம் கிருஷ்ணனின் எழுத்தில் உள்ளது தெரிகிறது. வாழ்க்கையோடு கலந்திருந்த குடும்ப இயல்புகளையும், நடைமுறை யதார்த்தங்களையும் தமது எழுத்துக்களில் எழுதி தன் எழுத்தாளுமையை நிலைநிறுத்திக் கொண்டார். ஒடுக்கு முறைகளில் இருந்து வெளிப்பட்டு, சமுதாய சமநிலை என்ற உரிமை பெறுவதுதான் பெண் அடைய வேண்டிய இலக்கு என்பது தூசிகதையின் வழி அவர் கூறலாகும் கருத்தாக இக்கட்டுரை வலியுறுத்துகின்றது. ஒரு நூற்றாண்டுக்குப் பெண்ணின் தேவைகளை அவர்களின் வளர்ச்சிக்கான ராஜபாட்டையை தன் உழைப்பால் ஏற்படுத்தித் தந்தவர் ராஜம் கிருஷ்ணன். சமூகம் நன்றியோடு நினைவு கூர வேண்டியவர்களுள் தலையாயவர் ராஜம் கிருஷ்ணன். ராஜம் கிருஷ்ணனின் தனித்துவம் என்று கூறலாமே தவிர அந்த ஒரு எல்லைக்குள் மட்டுமே அவரது ஆளுமையையும், எழுத்தாளுமையையும் முற்றாக வரையறை செய்துவிட முடியாது தான். ஆனாலும், அன்னாரின் எழுத்தாளுமை ஒரு நூற்றாண்டுக் கடந்தும் இன்னும் நம் வாழ்வியலில் பங்காற்றுவதை இக்கட்டுரையின் வாயிலாக காணலாம்.

## References

ராஜம் கிருஷ்ணன், தூசி, (2012) கதைத் தொகுப்பு: குடும்பம், கதைப் பதிவு

இறையன்பு, வெ. (2019) வையைத் தலைமை கொள், நியூ செஞ்சரி புக் ஹவுஸ், சென்னை.

சற்குணவதி மு. (2010), தமிழ் இலக்கியங்களில் மனித உறவுகள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை

நயினார் சு. (2007), காலந்தோறும் பெண்கள், வல்லிக்கண்ணன் இலக்கியப் பேரவை, பொருநை இலக்கிய வட்டம், திருநெல்வேலி

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License